அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் : 187 /2016
தேதி : 07.12.2016

## மூத்த பத்திரிகையாளர் சோ அவர்களின் மறைவு
## பத்திரிக்கை உலகிற்கு ஓர் இழப்பு
## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர்
## ஆர்.சரத்குமார் இரங்கல்.

அரசியலில் தன்னை நேரிடையாக ஈடுபடுத்திக் கொள்ளாமல் அரசியல் ஞானியாக திகழ்ந்தவர். நடுநிலையான பத்திரிக்கையாளர் என்று பலராலும் பாராட்டப்பட்டவர். நகைச்சுவை நடிப்பில் தனது பாணியில் முத்திரை பதித்தவர். பல மூத்த அரசியல்வாதிகளின் பெரும் மதிப்பை பெற்றவர். தனது நாடகங்களின் மூலம் சமுதாய அவலங்களை எடுத்துக்கூறி பல்லாயிரக்கணக்கான மக்களின் மதிப்பை பெற்றவர்.

தமிழகத்தின் நெருக்கடியான பல அரசியல் தருணங்களில் அவரது பங்களிப்பு முத்திரை பதித்து மாற்றத்தை உருவாக்கியது. ஆன்மீகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். கடந்த ஆண்டு துக்ளக் ஆண்டு விழாவில் அவருடன் கலந்து கொண்டதை பெருமையாகக் கருதுகிறேன்.அவரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறேன்.

சிறந்த கலைஞர், சிந்தனையாளர், பத்திரிக்கை ஆசிரியர், அரசியல் நுண்ணறிவாளரை தமிழகம் இழந்து விட்டது அவரது குடும்பத்தினருக்கு என் சார்பிலும் சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

கனத்த இதயத்துடன்



ஆர் சரத்குமார்
நிறுவனத்தலைவர்